அந்தப் பகுதியில் புறவழிச் சாலை அமைத்துத் தரும்படி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிப் பகுதிகளில் போக்குவரத்துச் செறிவு அதிகமாக உள்ள இடங்களில் அதைக் குறைப்பதற்காக புறவழிச் சாலைகளை அமைத்து வருகின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற குடியாத்தம் பகுதியில் இருக்கிற போக்குவரத்துச் செறிவைக் கணக்கிட்டு, போக்குவரத்துச் செறிவு அதிகமாக இருக்கின்றபட்சத்திலே நிதிநிலைக்கேற்ப புறவழிச் சாலையை அமைக்க அரசு ஆவன செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 82, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

82—

மின் வாரியப் பிரிவு அலுவலகம்

***868 திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அந்தியூர் தொகுதி, பர்கூரில் புதிய மின் வாரியப் பிரிவு அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே இதுகுறித்து அவையில் கேள்வி எழுப்பியபோது, மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு பரிசீலிக்கப்படுமென்று சொல்லியிருக்கின்றேன். இப்பொழுது அது ஆய்விலே இருக்கின்றது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன் அவர்கள்.

திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இருளில் மூழ்கியிருந்த தமிழகத்தை மீட்டு மின்மிகை மாநிலமாக்கி, ஒவ்வொரு வீட்டிற்கும் 100 யூனிட் கட்டணமில்லா மின்சாரம் வழங்கிய, தமிழகத்தினுடைய நிரந்தர முதல்வர் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த பதில் திருப்திகரமாக இருக்கிறது. எனவே, விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். காரணம் பர்கூர் ஊராட்சியானது, மலைவாழ் மக்களைக் கொண்ட ஊராட்சியாகும். அவர்கள் மின் கட்டணம் செலுத்துவதற்கு, மின் வாரிய அலுவலகத்திற்கு மலைக்குக்கீழ்தான் வரவேண்டி இருக்கின்றது; தூரமும் அதிகம். போக்குவரத்தினால் காலதாமதமும் ஏற்படுகின்றது. மின் பழுது ஏற்படுகிற நேரத்தில், மின் ஊழியர்கள் மலைப் பகுதிக்குச் செல்லும்போது, போக்குவரத்தினால் அவர்களுக்கும் காலதாமதம் ஏற்படுகிறது. எனவே, மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், மக்கள் பணியை விரைவாகச் செய்யும் வகையிலே, மாண்புமிகு அம்மாவின் அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க ஆவன செய்யுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் உதவிப் பொறியாளர் அலுவலகம் அமைக்கப்பட வேண்டும் என்றால், 126 மின் மாற்றிகள் இருக்க வேண்டும். பர்கூர் மலைப் பகுதியில் 30 மின் மாற்றிகள்தான் இருக்கின்றன. அதுமட்டுமல்லாமல், தொடர் செலவினமாக 50 இலட்சம் ரூபாய் ஆகிறது. மலைவாழ் மக்களுக்கு ஏதாவது தேவை என்றால் அங்கு உடனே ஆய்வு செய்ய வேண்டும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் சொல்லியிருப்பதால், உடனடியாக ஆய்வு செய்து, அது முடிந்தவுடன், மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு அந்தப் பகுதிகளில் பிரிவு அலுவலகம் அமைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன் அவர்கள்.*

திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்யப்படும் என்று பதில் அளித்திருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், அந்தியூர் சட்டமன்றத் தொகுதி, குறிப்பாக பர்கூர் மலைவாழ் மக்களின் சார்பாக நன்றியைக் கூறிக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 83, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். தமிமுன் அன்சாரி, மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

83—

மீன் இறங்குதளம்

***1355—திரு. எம். தமிமுன் அன்சாரி:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—